1972 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : சட்டமன்ற அச்சுப் பணியைக் கவனிப்பதற்கென்று தனி அச்சகம் ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : சட்டசபைக்கான தனி அச்சகம் அமைக்க முடியாத நிலை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் இப்போது அண்மையில் வெகு வேகமாக வந்து கொண்டிருக்கின்றன, அந்த விதத்தில் அமைச்சர் அவர்கள் பாராட்டை பேரவைத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். அது மாதிரி இங்கே நிறைவேற்றப்படுகிற சட்டங்களும், சட்டத்திருத்தங்களும் அந்தந்த வாரமே அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களது யோசனையை பரிசீலனை செய்து ஆவன செய்ய அரசு முயற்சிக்கும்.

சத்துணவுத் திட்டம்

* 279 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் ரொட்டி பால் வழங்குவது சென்னை நகரில் எத்தனை இடங்களில் செயல் படுத்தப்படுகிறது ?

(இ) தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் எங்கெங்கு வழங்கப்படுகிறது ?

(உ) தமிழகத்தின் எல்லா நகராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தை செயல்படுத்தவேண்டி மத்திய அரசினை நமது அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) மத்திய அரசின் சிறப்புச்சத்துணவுத்திட்டத்தின்கீழ் சென்னை நகரில் 319 உணவு வழங்கு நிலையங்கள் மூலம் மாடர்ன் பேக்கரிஸ் நிறுவனத்தாரால் தயாரிக்கப்படும் சத்தூட்டப்பட்ட பால்ரொட்டி (Milk Bread) குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

(இ) ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கட்தொகையுடைய 18 நகராட்சிகளில் மாடர்ன் பேக்கரிஸ் நிறுவனத்தாரால் தயாரிக்கப்படும் சத்தூட்டப்பட்ட பால்ரொட்டி மட்டுமே வழங்கப்படுகிறது.

(உ) மக்கட்தொகை 50,000-த்திற்கு அதிகமுள்ள நகராட்சிப் பகுதிகளுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த மத்திய அரசிடம் கோரிக்கை விடுப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : கிராமப் பகுதியில் உள்ளவர்களுக்கும், நோயாளிகள், வயது வந்தவர்கள், உடல் ஊனமுற்றவர்களுக்கும் இந்தச் சத்துணவு திட்டத்தை விரிவுபடுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நோயாளிகளுக்கு விரிவுபடுத்தும் ஆலோசனை இப்போது இல்லை. பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு விரிவுபடுத்தும் திட்டம் செயல்படுகிறது. அவர்களுக்கு வைட்டமின் மாத்திரைகள் எல்லாம் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. எல்லாக் குழந்தைகளுக்கும் இந்தச் சத்துணவு தர வேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கி. ஜெயராமன் : சேலம் நகராட்சியிலிருந்து இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளதா? அரசு துரிதமான நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சேலத்தில் 4,000 குழந்தைகளும், 746 பெண்களும் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறுகிறார்கள். இந்தத் திட்டத்தின்மூலம் சத்துணவு தர அரசு ஆலோசித்து வருகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Since this distribution is mainly taking place through voluntary organisations, there is lot of complaint that certain parties take advantage of this distribution. So will this Government consider the question of distributing these articles through Corporation and through its Child Welfare Department?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது கொடுக்கின்ற முறையில் எந்தவிதத் தவறுகளும் இருப்பதாகப் புகார் வரவில்லை. சென்னை மாநகராட்சியில் மட்டும் அப்படிப்பட்ட நிலையங்

1972 ஆகஸ்ட் 23]

கள் மூலம் தரலாம். மற்ற மாவட்டங்களில் முடியாது. குறைகள் அதிகமாக இல்லை. ஒன்றிரண்டு இருந்தாலும் உடனடியாக நீக்கப் படுகின்றது.

*280 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் வயது வரம்பை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கும் உதவி யாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) மத்திய அரசின் அனுமதியின் பேரில் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங் கும் வயது வரம்பு மூன்றிலிருந்து ஆறு ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(இ) மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் இச்சிறப்புச் சத்துணவுத் திட்டம் இம்மாநிலத்தில் செயற்படுத்தப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: சத்துணவாக என்ன பொருள்கள் கொடுக்கப்படுகின்றன? சத்துணவு வகையில் வைட்டமின் மாத் திரைகள் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: குழந்தைகளுக்கும் தாயார்களுக்கும் சத்துணவு, வைட்டமின் மாத்திரைகள், இரும்புச் சத்துள்ள மாத்திரைகள் ஆகியவை கொடுக்கப்படுகின்றன.

திரு. வீ. செல்லதுரை: சேரிப் பகுதிக் குழந்தைகளும், தாய் மார்களும் மிகவும் பலவீனமாக இருப்பதால் மற்றவர்களுக்குக் கொடுக்கும் அளவை விட இரண்டு மடங்கு அவர்களுக்கு கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதன் அவசி யத்தை உணர்ந்துதான் அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அதிகமாகக் குழந்தைகள் பெறுவதைக் குறைத்துக் கொண்டால் தாய்க்கும் சேய்க்கும் நலமாக இருக்கும்.